திரு. கே. பொன்னையன் : சார், இந்த போனஸ் சட்டப் பிரகாரம் நஷ்டம் ஆகிவிட்டாலும் கூட குறைந்தது 4 சத விகிதம் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. நாங்கள் இதுவரையில் 4 சத விகிதம் தான் வாங்கியிருக்கிறோம். ஆகையால் தேயிலைத் தோட்டங்களெல்லாம் நஷ்டத்தில் இருக்கின்றன என்று கொள்ள லாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது இந்தக் கேள்வியிலிருந்து எழக்கூடியது அல்ல. தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம்.

* 345 *Q.*—SRI V. SANKARAN :
SRI M. KARUNANITHI : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Union Government have written to the State Government for their consideration of the feasibility of extension of the Bonus Act to the State owned Industrial Establishments also; and

(*b*) if so, the stand taken by the Government regarding the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM. (*a*) Yes.

(*b*) The matter is under the consideration of the Government.

திரு. வை. சங்கரன் : இந்தப் பரிசீலனை எவ்வளவு காலத்திற்குள் முடியும் என்று எதிர்பார்க்கலாம் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பரிசீலனை கூடிய சீக்கிரத்தில் முடியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், அரசாங்கத்தின் கீழ் நேரடியாக நடைபெறுகிற ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் போன்ற அந்த நிறுவனங்களுக்கும் இது பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னென்ன பொது நிறுவனங்களுக்கு இந்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவது என்பது மொத்தத்தில் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், கனம் முதல் அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். என்ன விஷயம் பரிசீலனையில் இருக்கிறது? போனஸ் சட்டத்தை அரசாங்கத்தின் கீழ் நடைபெறுகிற தொழில்களுக்கு அமல் நடத்தலாமா வேண்டாமா என்று பரிசீலனையில் இருக்கிறதா ? அல்லது எந்த எந்தத் துறையில் அமலுக்குக் கொண்டு வரவேண்டும் என்பது பரிசீலனையில் இருக்கிறதா ?

கனம் திரு எம். பக்தவத்சலம் : தோட்டத் தொழிலாளர்களைப் பற்றிக் கூறியது போல, இதை விட அதிகச் சலுகை குறிப்பிட்ட நிறுவனங்கள் அளித்துக்கொண்டு வந்தால், இதை அளிக்க

18th March 1966]

வேண்டுமென என்பது பரிசீலிக்கவேண்டியது. அந்த அந்த நிறுவனங்களில் உள்ளவர்கள் என்ன சொல்ல இருக்கிறார்கள் என்று கேட்டிருக்கிறோம். தோட்டத் தொழிலாளர்கள் விஷயத்தில் 10 அல்லது 11 சத விகிதம் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம். இப்போது போனஸ் சட்டப்படி குறைவாகத் தான் வரும். சர்க்கார் நடத்தும் குறிப்பிட்ட நிறுவனங்களில் அதை அமலுக்குக் கொண்டுவருவதென்றால் அனுகூலம் இருக்கிறதா, பிரதிகூலம் இருக்கிறதா என்று பரிசீலனை செய்து முடிவு எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், ஸ்டேட் எலெக்ட்ரிசிட்டி போர்டும் அரசாங்கத்தின் நேரடி நிறுவனம் தான் : தனியாக இருந்தாலும் கூட அதிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கும் போனஸ் கொடுப்பது பற்றி பரிசீலனையில் இருக்கிறதா? அதன் மீது முடிவு செய்யப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஸ்டேட் எலெக்ட்ரிசிட்டி போர்டிலே இருக்கிறவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்டிருக்கிறோம். அது வந்த பிறகு முடிவு செய்யப்படும்.

திட்ட ஆலோசகர்

* 346 கேள்வி.—திரு. மு. கருணாநிதி :
திரு. து. ப. அழகமுத்து : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழக அரசில் ‘ திட்ட ஆலோசகர் ’ என்ற புதிய பதவி ஏதேனும் உருவாக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) ‘ திட்ட ஆலோசகர் ’ என்பவர் திட்டமிட்ட வகையில் பொருளாதார வளர்ச்சிக்குச் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவார். நிறைவேற்றப்படும் திட்ட வேலைத்திட்டங்களை அவசியமெனக் கருதப்படும் அளவுக்கு ஆய்ந்து பார்த்து அவற்றை நல்ல முறையில் செயல்படுத்த தம் கருத்துரைகளை வழங்குவார். இந்திய அரசு திட்டக்குழு ஆகியவற்றுடன். இந்த அரசாங்கம் நடத்தும் முக்கியமான ஆலோசனைக் கூட்டங்களில் இந்த அரசாங்கத்தின் பிரதிநிதியாகச் சென்று கலந்து கொள்வார்.

திரு. சா. கணேசன் : இந்த ஆலோசகர் எந்த அடிப்படையில் பொறுக்கப்படுகிறார் ? அவருடைய ஊதியம், உதவித் தொகை அல்லது சம்பளம் என்ன ? அந்த ஆலோசகருடைய காரியாலயம் எத்தகைய எண்ணிக்கையோடு கூடிய உறுப்பினர்களை அல்லது பணியாளர்களைக் கொண்டதாக இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.